**43 பலகையிட்ட படலம்**

சேர மன்னனிடமிருந்து பொருள் பெற்ற பின்னர் பாணன் மூன்று வேளையும் பாடுவதல்லாமல், அர்த்த ஜாமத்திலும் பாடி வந்தான். அவனது நியமநெறியை உலகறியச் செய்ய திருவுள்ளம்கொண்ட சிவபெருமான் பெரு மழை பெய்யுமாறு செய்தார்.

பெருமழையையும்பொருட்படுத்தாமல்கோயிலுக்குச்சென்றுஜயனை வணங்கினான். மழையில் நனைத்த விரல் விரைப்புடன் யாழை மீட்டி நடுங்கும் குரலுடன் உடல்மயிர்சிலிர்க்க அமுதமாய் இசைப் பொழிந்தான். பாணனின் இசைத்தொண்டில் மகிழ்ந்தசுந்தரர் பாணனிடம் நவமணிகள் இழைத்த பொற் பலகை ஒன்றை கொடுத்தருளினார் பாணன் இறைவன் ஆணைப்படி அதன் மேல் நின்று பாடினான். பாணபத்ரன் பாடலுக்கு சோமசுந்தரர் அருளிய அருட்கொடையை அறிந்தான் வரகுணன். பாணனை மதுரை நாயகன் என்று போற்றி, அப்பலகையின் மீது இருக்கச் செய்து பரிசுகள் பல அளித்து மகிழ்ந்தான் மன்னன்.

**பல்லவி**

திருக்கோயில் தினமும் சென்று அர்த்தயாமத்திலும்
இசை பாடும் பாணனை உலகறிய ஆசைக் கொண்டு

**அனுபல்லவி**

பெருமழை பெய்யச் செய்தும் பிறழாமல் அதனையும்
அருள் மழையாகக் கொண்டு உன் திருக்கோயில்

**சரணம்**

நவமணியிழைத்த பொற் பலகைதனை யளித்து
அதன் மேல் நின்று பாட்டுக்கள் பாணனை பணித்தீர்
அவனே எங்கள் மதுரை நாயகன் என்று பாணனை போற்றி
இரவில் நடந்ததையறிந்த வரகுணன் வணங்கினான்